# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 26.08.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் கடந்த குத்பாவில் சூரா ஃபாத்திஹாவுடைய இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்ற வசனத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது தஃப்ஸீரிலிருந்து விளக்கம் கொடுத்திருந்தேன். நமக்கு இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது அல்லாஹ் நம்மீது செய்துள்ள மாபெரும் கருணையாகும். அவர்கள் மூலமாகத்தான் நமக்கு குர்ஆனின் ஆழிய ஞானம் மற்றும் தஃப்ஸீர் பற்றிய அறிவு கிடைத்திருக்கிறது. அதற்குப் பிறகு எனக்கு பல்வேறு கடிதங்கள் வந்தன. அதில் எங்களுக்கு அந்த குத்பாவிற்குப் பிறகு இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் பற்றிய ஞானத்தை அறிந்து தொழுகையில் இந்த துஆவில் கவனம் செலுத்தியவாறு தொழும் போது கிடைத்த சுவை, மிக அற்புதமாக இருந்தது. மேலும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டேயிருக்கிறது என எழுதியுள்ளனர்.

அரபி மொழி பேசக்கூடிய சில அரபியர்கள் எழுதியிருக்கிறார்கள். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய கராமத்துஸ் ஸாதிகீன் என்ற புத்தகத்தை ஏற்கனவே படித்திருக்கின்றோம். ஆனால் குத்பாவில் கூறப்பட்ட மேற்கோள்களைக் கேட்கும் போது நாங்கள் அதனை இதற்கு முன்பு படிக்கவேயில்லை எனத் தோன்றுகிறது.

நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய கலாம் (கூற்றுகள்) இதுபோன்றவையாகும். எனவே அதனை திரும்பத் திரும்ப படிக்க வேண்டும். திரும்பத் திரும்ப படிக்கும் போது புதிய புதிய விஷயங்கள் வெளிப்படும். புதிய புதிய ஞானங்களும் தெரிய வரும். ரமலானில் பொதுவாக துஆவின் பக்கம் கவனம் இருக்கும். எனவே துஆவைப் பற்றிய விஷயங்கள் உள்ளத்தை வெளிச்சமூட்டவும் செய்கின்றன. இந்த துஆக்களைப் பற்றிய விஷயம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய தஃப்ஸீர் இன்றும் தொடரும்.

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஒரு மேற்கோளை எடுத்து வைத்தேன். அதில் கூறியிருந்தார்கள். அதன் சுருக்கத்தை நான் கூறுகின்றேன்.

இய்யாக்க நஃபுதுவில் கலப்பற்ற முறையில் இறை அடியானாக ஆவதின் பக்கம் கவனமூட்டப்பட்டிருக்கின்றது. மேலும் இய்யாக்க நஸ்தயீனில் அடியானாக இருப்பதற்கு ஆற்றல், உறுதிப்பாடு, நிலைநிற்றல் மற்றும் தொடர் முயற்சியின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ஏனென்றால் ஆற்றல் மற்றும் உறுதிப்பாடு இறைவனது அருளினால்தான் கிடைக்கின்றன. ஆற்றல் மற்றும் உறுதிப்பாடு இல்லையென்றால் பிறகு அடியானாக இருப்பதற்குரிய உரிமையை நிறைவேற்ற முடியாது.

இபாதத் செய்வதற்கான முயற்சி இருந்தாலும், இறைவனுடைய உதவி இல்லையென்றால் சில நாட்கள் இபாதத் செய்த பிறகு இபாதத்தில் தொடர்ச்சி இல்லாமல் இன்பம் இல்லாமல் மனஇச்சைகளில் மூழ்குவதற்கான நிலைமை ஏற்படும். பலரும் எனக்கு எழுதுகிறார்கள். ரமலானின் காரணத்தினால் எங்களுக்கு இபாதத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. இபாதத்திற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் நாங்களும் இபாதத்துகளில் ஈடுபடுகின்றோம். ரமலான் முடிந்த பிறகு பழைய நிலைக்கே திரும்பி விட்டோம். தொழுகின்றோம். ஆனால் அந்த இன்பமும் ஆர்வமும் இருப்பதில்லை. எனவே இன்றைய சூழலில் இபாதத்துகளில் ஆர்வம், ஆற்றல் மற்றும் நிலைநிற்றலுக்காக கற்றுக் கொடுக்கப்பட்ட துஆயையும் செய்ய வேண்டும். இதன் மூலம் அடியானுக்குரிய சரியான உரிமையை நிறைவேற்றவும், எப்போதும் நிறைவேறிக்

கொண்டே இருக்கவும் வேண்டும். நிலைநிற்றல் இல்லையென்றால் அடியானுக்குரிய உரிமையை நிறைவேற்ற முடியாது.

**பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அடியான் ஆவதற்கான கவனம் மற்றும் நிலைநிற்றலுக்கான தேடலுக்குப் பிறகு மூஃமினிடம் இருக்க வேண்டிய அடுத்த விஷயம் என்னவென்றால் நான் குத்பாவில் படித்த மேற்கோளின்படி அந்த முக்கியமான விஷயம் ஒரு மூஃமினுக்கு அது எப்படிப்பட்ட ஆற்றல் என்றால், அந்த ஆற்றல் எவ்வாறு கிடைக்கப்பெறும் என்றால், எதன் மீது நிலை நிற்றல் வேண்டும். அதைப்பற்றிய அறிவு நமக்கு தெரிய வேண்டும். அந்த அறிவு இல்லையென்றால் ஒருவேளை அடியானாவதற்கு வழிகாட்டல் இல்லையென்றால் பிறகு மனிதன் இரவில் கம்பு சுத்துவது போன்றதாகும். மேலும் அவருக்கு எப்படிப்பட்ட அடிமைத்தனத்தை தேடுகிறார் என்பதே தெரியாமல் போய்விடும். எந்த விஷயத்தைச் செய்ய வேண்டும். எந்த விஷயத்தைக் கேட்க வேண்டும். எந்த பாதையைத் தேட வேண்டும் என்பதே தெரியாமல் போய் விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவு மற்றும் நேர்வழிக்கான தேடலுக்கு இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவைச் செய்வது அவசியமானதாகும். இதனால்தான் அல்லாஹ் நமக்கு இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். இதன் மூலம் அல்லாஹ் மனிதனின் இபாதத் மற்றும் முயற்சியில் பரக்கத்தை ஏற்படுத்தியவாறு ஒரு உண்மையான இபாதத் செய்யக் கூடியவருக்கும் அல்லாஹ்வுடைய வழியை தேடக்கூடியவருக்கும் எப்போதும் நேர்வழியில் நிலைநிற்க உதவி செய்கின்றான். நிலை நிற்பதற்கான வாய்ப்பினை வழங்கிக் கொண்டே செல்கின்றான்.

எனவே இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ தொடர்ந்து அடிமைத்தனத்தின் உரிமையை நிறைவேற்றத் தேவையான நிலைநிற்றல், ஆற்றல் பெறுதல் மற்றும் அறிவு பெறுவதற்காக இருக்கிறது. இதன் உயர் தரத்தைப் பெறுவது அவசியமானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றின் அடிப்படையில் இந்த மூன்று துஆக்களுடைய சுருக்கம் என்னவென்றால், முழுமையான நன்னடத்தை முழுமையான முயற்சி மற்றும் ஹிதாயத்தைப் புரிவதற்கான முழுமையான திறன் கிடைக்கப்பெறாதவரை ஒரு உண்மையான மூஃமின் நல்லடியாராக ஆக விரும்புபவர் முயற்சியின்றி உட்காரக்கூடாது. மேலும் நாம் இரட்சிப்பை பெற்றவர்களாவி விட்டோம் என்றோ, நாம் நமது நோக்கத்தை அடைந்து விட்டோம் என்றோ ஒருபோதும் எண்ணக் கூடாது. அல்லது ஒரு மூஃமினுடைய நோக்கமாக இருக்கக்கூடிய இறை அன்பின் உச்ச வரம்பை பெற்று விட்டோம் என்றும் நினைக்கக் கூடாது.

எனவே எந்த மூஃமினிடம் நாம் எப்பொழுது வரை இந்த வழிகளில் நடக்க மாட்டோமோ அப்போது வரை முயற்சி மேற்கொள்ளப்படாமல் இருந்துவிடக் கூடாது என்ற சிந்தனை எழுமோ அப்படிப்பட்ட மூஃமினின் பாதங்கள் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். பிறகு பள்ளிவாசலின் பக்கம் வருவதற்கு உள்ளம் விரும்பும். பிறகு தொழுகையைப் பேணுவதன் பக்கம் கவனம் ஏற்படும். பிறகு ரமலானுக்குப் பிறகும் கூட இபாதத்துகளில் ஒரு ஆர்வமும் அதில் ஏற்பட வேண்டிய உருக்கமும் உண்டாவதற்கு முயற்சி உருவாகும்.

நான் கடந்த குத்பாவில் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் உடைய விளக்கம் ஓரளவு கொடுத்திருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய இதன் பல பிரிவுகள் உங்கள் முன் வைக்கப்பட்டது. இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தஃப்ஸீரின் ஒளியில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் உடைய சில ஆழமான கருத்துகள், பொருள், அதன் ரூஹ் என்ன என்பதை எடுத்துரைப்பேன். இதிலிருந்து இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ எவ்வளவு விரிவானது என்பது தெரிய வரும். நம்முடைய ஒவ்வொரு விஷயத்தையும் இந்த துஆ எவ்வாறு ஆட்கொண்டுள்ளது என்பதும்

தெரியவரும். நான் முதலில் மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அதிலிருந்து நேர்வழியினைப் பெற தகுதியான மக்கள் யார் என்பது தெரிய வரும். மேலும் ஹிதாயத் கிடைப்பதற்கான சரியான வழி யாருக்கெல்லாம் தெரியும் என்பதும் யாரெல்லாம் அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதும் தெரிய வரும்.

இதுவும் கராமத்துஸ் ஸாதிகீன் என்ற நூலின் மேற்கோளாகும். அதன் மொழியாக்கத்தை படித்துக் காட்டுகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த சூராவில் அதாவது சூரா ஃபாத்திஹாவில் அல்லாஹ் தனது முஸ்லிம் அடியாருக்கு பேதனையை வழங்குகின்றான். அவன் கூறுகின்றான்: எனது அடியார்களே! நீங்கள் யூதர்களையும் கிறித்தவர்களையும் பார்த்து விட்டீர்கள். நீங்கள் அவர்களைப் போன்று அமல் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். துஆ மற்றும் நிலை நிற்றலுக்கான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள. யூதர்களைப் போன்று அல்லாஹ்வின் அருள்களை மறக்காதீர்கள. இல்லையென்றால் அவனது கோபம் உங்கள் மீது இறங்கும். நீங்கள் உண்மையான அறிவு மற்றும் துஆவை ஒருபோதும் கைவிடாதீர்கள். கிறிஸ்தவர்களைப் போன்று ஹிதாயத்தை வேண்டுவதில் சோம்பேறிகளாகி விடாதீர்கள். இல்லையென்றால் நீங்கள் வழிதவறிப் போய் விடுவீர்கள். மேலும் ஹிதாயத்தில் நிலைநிற்றல் அல்லாஹ்வுடைய தொடர்ந்து துஆ மற்றும் மன்றாடல் இல்லாமல் கிடைக்கப் பெறாது என்பதனை சுட்டிக்காட்டி ஹிதாயத்தை தேடுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து துஆ மற்றும் மன்றாடலில் ஈடுபடாமல் ஹிதாயத்தில் நிலைநிற்பது சாத்தியமற்றதாகும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

அதாவது ஹிதாயத் என்பது இறைவன் புறமிருந்து கிடைப்பதாகும். எப்போது வரை இறைவன் அடியானுக்கு வழிகாட்ட மாட்டானோ, அவனை நேர்வழி பெற்ற மக்களுடன் இணைக்க மாட்டானோ அப்போது வரை அவர் ஒருபோதும் நேர்வழியினைப் பெற முடியாது. மேலும் இதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, ஹிதாயத்திற்கு எல்லை எதுவும் கிடையாது. மனிதன் துஆ என்ற ஏணி மூலமாகத்தான் அவனை அடைய முடியும். எந்த மனிதன் துஆவை விட்டு விடுவாரோ அவர் தனது ஏணியை விட்டு விட்டவராவார். நிச்சயமாக ஹிதாயத்தினைப் பெற தகுதியானவர் யாரென்றால் எவரது நாவிலிருந்து திக்ரே இலாஹி மற்றும் துஆ வெளிப்பட்டுக் கொண்டிருக்குமோ மேலும் இதில் தொடர்ந்து நிலைநிற்பாரோ அவரே தகுதியானவர் ஆவார்.

எனவே இதுதான் ஹிதாயத்தினை தேடிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு மூஃமினுக்குரிய அறிவுரை ஆகும். துஆ மற்றும் நிலைநிற்றலை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டும். இதனை ஒருபோதும் விடக்கூடாது. ஹிதாயத்தை வேண்டுவதில் சோம்பேறித்தனம் இருக்கக் கூடாது. இல்லையென்றால் வழிதவறியவர்களாகி விடுவீர்கள்.

நினைவில் கொள்ளுங்கள். ஹிதாயத்தில் நிலை நிற்றல், தொடர் துஆ மற்றும் மன்றாடல் இல்லாமல் கிடைக்கப் பெறாது. ஒருவேளை துஆ செய்யவில்லை என்றால் ஹிதாயத்திற்கான வழிகள் அடைக்கப்பட்டதாக காண்பீர்கள். ஏனென்றால் மனிதன் ஹிதாயத்தை தனது ஆற்றலால் பெற முடியாது.

**பிறகு கூறுகின்றார்கள்:**

இந்த விஷயத்தை எப்போதும் கண் முன் வையுங்கள். ஹிதாயத்திற்கு எல்லை எதுவும் கிடையாது. நாம் ஹிதாயத்தைப் பெற்று விட்டோம்; நான் பெற வேண்டியதை பெற்று விட்டோம் என்று நினைக்காதீர்கள். ஒரு தரத்தைப் பெற்றவுடன் நான் முழுமையான ஹிதாயத்தைப் பெற்று விட்டேன் என்று ஒருபோதும் கூற முடியாது.

எனவே எப்போது எல்லை இல்லை என்று ஆகி விட்டதோ அப்போது துஆ என்ற ஏணி தொடர்ந்து அவசியமானதாக இருக்கின்றது. எனவே ஒரு மூஃமின் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தற்காலிகமான இபாதத்துகள் ஹிதாயத்திற்கு காரணமாக அமையாது. மாறாக, உண்மையான முறையில் ஹிதாயத் பெற்றவர்கள் யாரென்றால் யாருடைய நாவு திக்ரே இலாஹி மற்றும் துஆவில் மூழ்கியிருக்குமோ அவர் தான் ஹிதாயத் பெற்றவராவார்.

எனவே இன்றைய நாட்களில் ரமலானின் காரணத்தினால் நமக்கு திக்ரே இலாஹியின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. துஆக்களின் பக்கமும் கவனம் ஏற்பட்டுள்ளது. இதனை நிரந்தரமாக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் எப்போதும் ஹிதாயத்தில் நிலை பெற்றிருக்க வேண்டும். மேலும் இதன் உயர் தரத்தைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்து கொண்டே செல்ல வேண்டும். பிறகு ஸிராத்தே முஸ்தகீம் உடைய பொருளை எடுத்துரைத்தவாறு நமக்கு புரிய வைக்கின்றார்கள்.

ஸிராத் என்பதற்கு அரபி அகராதியில் நேரான பதைக்கு கூறுவார்கள். அதாவது அதன் எல்லா பகுதிகளும் வரிசைக்கிரமமாக அமையப் பெற்றிருப்பதும் ஒன்று மற்றொன்றுக்கு நேராக இருப்பதும் ஆகும். அதாவது அதில் எந்த விதமான கோணலும், வளைவு சுழிவும் போன்ற எந்தவித பிரச்சனை இல்லாமல் இருப்பதாகும். சரியாகவும் நேராகவும் நோக்கத்தின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடியதும் ஆகும். இவையில்லாமல் மனிதன் ஓரிடத்தை அடைந்த பிறகு நான் வலது பக்கம் போகவா அல்லது இடது பக்கம் போகவா என்று குழம்பித் தவிக்காமல் நமது நோக்கமாகிய இறைவனை அடைவதின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட வழியினைத் தான் ஸிராத் என்று கூறுவார்கள். தவற்றின் பக்கம் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். எங்கு திரும்ப வேண்டுமோ அங்கு திரும்புவதற்கு வழிகாட்ட வேண்டும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் உடைய உண்மையான விளக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:**

சூஃபிகள், இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்பதற்கு அர்ப்பணித்தல் என்பதையே பொருளாக கூறுகின்றார்கள். அதாவது ரூஹ், உணர்வு, எண்ணம் ஆகிய அனைத்தும் அல்லாஹ்வுக்காக ஆகிவிட வேண்டும். தனது உணர்வுகள், தனது மன இச்சைகள் முழுவதுமாக மரணித்து விட வேண்டும். அல்லாஹ்வின் விருப்பம் மற்றும் எண்ணத்திற்கு தனது ஆசை மற்றும் உணர்வை விட முக்கியத்துவம் அளிக்காத சில மனிதர்கள் பல நேரங்களில் உலக நோக்கங்கள், உலக எண்ணங்களில் தோல்வி அடைந்தவாறு இவ்வுலகிலிருந்து சென்று விடுகிறார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

தொழுகை துஆ ஆகும். இதில் இறைவனுடைய இஸ்மே அஃலம் மிக உயரிய பெயரான அல்லாஹ் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் போலவே மனிதனுடைய (இஸ்மே அஃலம்) உயரிய பெயர் நிலைநிற்றல் ஆகும். இஸ்மே அஃலம் என்பது எதன் மூலம் மனிதனுடைய உயர்பு, மேன்மை கிடைக்கப் பெறுமோ அதுவே ஆகும். அதாவது தொடர் முயற்சியுடன் துஆவில் ஈடுபடும்போது தான் அல்லாஹ்வின் பக்கம் செல்லும் போது தான் மனிதனுடைய உணர்வு, மேன்மை கிடைக்கப் பெறும். அல்லது அதன் பக்கம் முன்னேற முடியும்.

எனவே மனிதன் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ செய்யும் போது அல்லாஹ்வின் போதனைகளையும் கண் முன் நிறுத்த வேண்டும். அனுமதிக்கப்பட்ட அனுமதிக்கப்படாத எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எதெல்லாம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் எதெல்லாம் செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். திருக்குர்ஆனுடைய கட்டளைகளை கண் முன் நிறுத்த வேண்டும். இறைவனுடைய உரிமைகளை நிறைவேற்றுவதுடன் அடியானுடைய

உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் அடியானுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளும் இறைவன் பக்கமே அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்கின்றது. இதெல்லாம் இருக்கும் போது தான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் உள்ளத்தின் ஓசையாக வெளிப்படும். அப்போது தான் நிலைநிற்றலின் நிலைமை கிடைக்கப் பெறும். அப்போதுதான் மனிதனிடம் மேன்மை அடைவதன் பக்கம் கவனமும் முயற்சியும் உண்டாகும். பிறகு தான் மனிதன் இறைவனுடைய அரவணைப்பில் வந்தவாறு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சியினைக் காண்பான்.

மனிதன் உறுதியாக நிலைநின்றவாறு இறைவனுக்கு முன்பு குனிந்தவாறு இருக்கும் போது, ஹிதாயத்தினைப் பெறுவதற்கு இறைவனை மட்டும் அழைக்கும் போது ஸிராத்தே முஸ்தகீம் நிலைபெறுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

துஆ செய்வதற்கான வழி இரண்டு இஸ்மே அஃலம் ஆகும்.

அதாவது இரண்டு உயரிய பெயர்களும் ஒன்றிணைய வேண்டும். மனிதன் இறைவன் பக்கம் செல்ல வேண்டும். மற்றவர்களிடம் செல்லக் கூடாது. மனிதன் அவனது நாட்டங்கள், விருப்பங்கள் பக்கமும் செல்லக் கூடாது. இந்த நிலைமை ஏற்படும் போது உத்வூனி யஸ்தஜ்புலகும் உடைய இன்பம் கிடைக்கப் பெறும். மனிதன் ரப்புனல்லாஹ் என்று கூறும்போது, இந்த அழைப்பு இருக்கும் போது இதில் உறுதியுடன் நிலைநிற்கும்போது துஆ செய்ய வாய்ப்பு கிடைக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதுதான் அசல் வாய்ப்பு ஆகும். இங்கு நான் உத்வூனி யஸ்தஜிபுலகும் உடைய இன்பம் கிடைக்கப் பெறும். மனிதன் அதாவது அல்லாஹ்வின் கூற்றாகிய நீங்கள் என்னை அழையுங்கள் நான் உங்களுடைய துஆக்களை கேட்கின்றேன் என்பது இங்கு நிறைவேறும்.

எனவே உறுதியாக நிலைநிற்றல் நிபந்தனை ஆகும். அல்லாஹ்வை அனைத்து சக்திகளுக்கும் எஜமானன் என கருதியவாறு ரப் ஆக எண்ணியவாறு அவன் முன் குனிவது நிபந்தனை ஆகும். மேலும் துஆ மக்களுடைய அனைத்து நிலைமைகளை சூழ்ந்ததாக உள்ளது. அதாவது எப்படிப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய மனிதனாக இருந்தாலும் சரி அவருக்கு துஆ அவசியமானதாகும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

எனவே சுருக்கம் என்னவென்றால் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ மனிதனுக்கு கோணலிலிருந்து இரட்சிப்பினை வழங்குகிறது. மேலும் மனிதனுக்கு வலுமைமிக்க மார்க்கத்தை தெளிவுபடுத்துகின்றது. மனிதனை பாழடைந்த வீட்டிலிருந்து வெளியேற்றி பழங்கள் நிறைந்த மனம் மிகுந்த தோட்டங்களுக்கு எடுத்துச் செல்கின்றது. எந்தவொரு மனிதன் இந்த துஆவை அதிகமாக வேண்டுவாரோ அல்லாஹ் அவரை நன்மையிலும் பரக்கத்திலும் முன்னேற்றமடையச் செய்வான். இந்த துஆ மூலமாகத்தான் நபிமார்கள் இறைவனுடைய அன்பைப் பெற்றார்கள். தனது கடைசி நேரம் வரை ஒரு நொடிப்பொழுது கூட இந்த துஆவை விடவில்லை. எவருக்கும் இந்த துஆவிலிருந்து கவனமற்றவராக இருப்பது அல்லது இந்த நோக்கத்திலிருந்து முகம் திருப்பிக் கொள்வது உகந்ததல்ல. அவர் நபியாக இருந்தாலும் ரஸுலாக இருந்தாலும் சரியே! ஏனென்றால் ஹிதாயத் – நேர்வழிக்கான தரம் ஒருபோதும் முடிவடைவதில்லை. மாறாக அவை எல்லையற்றவையாகும். அறிவு மற்றும் சிந்தனை அதுவரை செல்ல முடியாது. எனவே அல்லாஹ் தனது அடியார்களுக்கு இந்த துஆவைக் கற்றுக் கொடுத்து இருக்கின்றான். இதனை தொழுகையின் மையமாக ஆக்கியுள்ளான். இதன் மூலம் மக்கள் அவனுடைய ஹிதாயத்திலிருந்து பலன் பெற வேண்டும். மேலும் இதன் மூலம் தவ்ஹீதை முழுமை அடையச் செய்ய வேண்டும். இறைவனுடைய வாக்குறுதிகளை நினைவில் கொள்ள வேண்டும். இணை வைப்பவர்களின் இணையிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும். இந்த

துஆவின் மேன்மையின் ஒரு மேன்மை இது மனிதனின் அனைத்து நிலையினையும் சூழ்ந்துள்ளது. ஒவ்வொரு நபரையும் ஆட்கொண்டுள்ளது. இது ஒரு எல்லையற்ற துஆ ஆகும். இதற்கு எந்தவிதமான எல்லையும் முடிவும் கிடையாது. அதேபோல் இதற்கு எந்த விதமான கரையும் கிடையாது. எனவே இறைஞானம் பெற்றவர்களைப் போன்று இந்த துஆவில் தொடர்ந்து நிலை நிற்கக்கூடியவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவார்கள். தமது இறைவனை அறிந்து கொண்ட அல்லாஹ்வின் அடியார்களைப் போன்று இரத்தம் சிந்தும் இதயத்துடனும், சகித்துக் கொள்ளும் ஆன்மாவுடனும் இந்த துஆவில் நிலைநிற்கக் கூடியவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர்.

**கூறுகின்றார்கள்:** இந்த துஆ ஒவ்வொரு நன்மையையும், அமைதியையும், உறுதிப்பாடு மற்றும் நிலைநிற்றலையும் அடக்கியதாக உள்ளது. துஆவில் ரப்புல் ஆலமீனிடமிருந்து பல நற்செய்திகள் இருக்கின்றன. இந்த துஆவில் ரப்புல் ஆலமீனிடமிருந்து பல நற்செய்திகள் உள்ளன.

**எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அதன் சுருக்கத்தைக் கூறுகிறேன். இது ஏன் அனைத்து தரப்பு மக்களுக்கும் அவசியமாக உள்ளது என்றால், இது மனிதனை அனைத்து விதமான கோணல்களிலிருந்தும் காப்பாற்றுகின்றது. மனிதனது பாதையில் பல்வேறு வழிகளில் வழிகெடுப்பதற்கு ஷய்த்தான் உட்கார்ந்திருக்கின்றான். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் உள்ளத்திலிருந்து வெளிப்படுவதாக இருந்தால் பிறகு இந்த துஆ ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றும். ஈமானில் நிலைநிற்கச் செய்யும்.

உலகம் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்லக்கூடிய இன்றைய காலத்தில் இந்த துஆ மிகப்பெரிய துஆ ஆகும். இது ஒரு மனிதனை நேரான வழியில் நிலைநிற்கச் செய்கிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று உறுதியாக தொடர்ந்து அல்லாஹ்விடமிருந்து உதவி தேடுபவராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். மேலும் கலப்பற்ற நிலையில் எந்த மனிதனும் எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் ஒருவேளை அல்லாஹ்விடம் நேர்வழியை வேண்டினான் என்றால் அல்லாஹ் சரியான மார்க்கத்தின் பக்கம் அவனுக்கு நேர்வழி காட்டுவான். மாறாக மதமற்றவர்களுக்கும் கூட அல்லாஹ் நேர்வழி காட்டுவான். அவர்களுக்கும் ஹிதாயத்திற்கான வழியாக இது அமைந்து விடுகின்றது. ஆனால் நிய்யத் நல்லதாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

அன்னார் கூறினார்கள்: நபிமார்கள், ரஹ்மானாகிய இறைவனுடைய அன்பை இந்த துஆவின் மூலமாகத்தான் பெற்றார்கள். எனவே எப்படிப்பட்ட தரத்தைக் கொண்ட மனிதனாக இருந்தாலும் சரி, எந்த மனிதனாக இருந்தாலும் சரி எந்த அளவு உருக்கத்துடன் இந்த துஆவை செய்வாரோ அல்லாஹ் அவருடைய நன்மையிலும் பரக்கத்திலும் முன்னேற்றத்தை வழங்குவான்.

எனவே மூஃமின் என்று வாதம் செய்யக் கூடியவர் இந்த துஆவின் பக்கம் கவனக் குறைவாக இருப்பது உகந்ததல்ல. மாறாக நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும் இந்த துஆ அவசியமானதாக இருந்திருக்கின்றது. ஏனென்றால் ஹிதாயத் நேர்வழியின் எல்லை ஒருபோதும் முடிவடைவதில்லை. அல்லாஹ்வுடன் தொடர்புடைய ஒவ்வொரு மனிதனுக்கும் நேர்வழி மற்றும் ஹிதாயத்திற்கு ஒரு தரம் உள்ளது. ஏனென்றால் அல்லாஹ்வின் அருள்களுக்கு எந்த எல்லையும் கிடையாது. எனவே ஹிதாயத்துடைய அடுத்த நிலையை அடைவதும் ஒரு மூஃமினுக்கு அவசியமானதாகும். ஒரு நிலையை அடைந்த பிறகு அடுத்த நிலையைத் தேட வேண்டும். அதனை தேடுவதற்கு அல்லாஹ் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை கற்றுத் தந்துள்ளனர்.

கூறுகின்றார்கள்: தவ்ஹீதும் இந்த துஆவின் மூலம் தான் முழுமை அடைகின்றது. அல்லாஹ்வை அடைவதற்கு அவன் காட்டிய ஹிதாயத்தின் வழியில் நடப்பதற்கு அல்லாஹ்விடம் செல்ல வேண்டியதிருக்கிறது. அவனிடமே உதவி தேட வேண்டியுள்ளது. அவனால் மட்டும் தான் நம்மை நேர்வழி பெற்றவர்களுடன் சேர்த்து வைக்க முடியும். வேறெவராலும் முடியாது.

எனவே இந்த துஆ அனைத்து தரப்பு மக்களுக்கும் அவசியமானதாகும். இறைவனால் காட்டப்பட்ட ஹிதாயத்தினை தேடக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த துஆ அவசியமானதாகும். மேலும் அதன் உயர் தகுதியை அடைய விரும்புபவருக்கும் அதற்கு முயற்சி செய்பவருக்கும் இது அவசியமானதாகும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

உண்மையான மூஃமின் யாரென்றால் தொடர்ந்து மன உருக்கத்துடன் இந்த துஆவை செய்யக் கூடியவரே ஆவார்.

எனவே இந்த துஆ அனைத்து தரப்பு மக்களுக்கும் அவசியமானதாகும். இதன் முக்கியத்துவம் மிக அதிகமாக இருக்கிறது. இதன் முக்கியத்துவத்தின் மீது ஒளியூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: சூரா ஃபாத்திஹாவில் கூறப்பட்டுள்ள ஏழாவது உண்மைத்துவம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் ஆகும். இதன் பொருள், எங்களுக்கு நேராக இருக்கக் கூடிய எந்தவித கோணலும் இல்லாத வழியினை காட்டுவாயாக. இப்படிப்பட்ட பாதையில் எங்களை நிலைநிறுத்துவாயாக என்பதாகும். இந்த உண்மைத்துவத்தின் விளக்கம் என்னவென்றால் மனிதன் இறைவன் வரை சென்றடைய நேரான பாதையை வேண்ட வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு நோக்கத்தினையும் அடைவதற்கு பொதுவான சட்டம் என்னவென்றால் நோக்கம் கிடைப்பதற்கான வழியினை பெற வேண்டும் என்பதாகும். இறைவன் ஒவ்வொரு விஷயத்தை அடைவதற்கு அதனை பெறுவதற்கான வழியினைப் பின்பற்ற வேண்டும் என்றே விதித்துள்ளான். எந்த வழியினை கடைபிடிப்பதனால் நோக்கத்தை அடைய முடியுமோ அதனை கடைபிடிக்க வேண்டும். மனிதன் ஸிராத்தே முஸ்தகீமில் சரியாக செயல்பட ஆரம்பித்தால் மேலும் அதனை பெறக்கூடிய வழிகளைக் கடைபிடித்தால் பிறகு அடைய வேண்டிய நோக்கம் தானாகவே கிடைக்கப் பெறும். மாறாக நோக்கத்தினை அடைவதற்குரிய வழிகளைப் பின்பற்றாமல் தானாகவே நோக்கத்தை அடைய முடியும் என்பது ஒருபோதும் சாத்தியமற்றதாகும். ஒவ்வொரு நோக்கத்தினை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட வழிவகைகள் இருக்கின்றன. எப்போது வரை மனிதன் அந்த வழிகளைப் பின்பற்ற மாட்டானோ அப்போது வரை அந்த நோக்கத்தை அவனால் அடைய முடியாது என்பதே ஆரம்பத்திலிருந்தே இயற்கைச் சட்டமாக இருக்கிறது.

எனவே எந்த விஷயத்தை உழைப்பு, முயற்சி, துஆ மற்றும் பணிவுடன் பெற வேண்டுமோ அது ஸிராத்தே முஸ்தகீம் ஆகும். எந்த மனிதன் ஸிராத்தே முஸ்தகீமைத் தேடுவதில் முயற்சி செய்யவில்லையோ அதனைப் பற்றி கவலையற்றவராக இருப்பாரானால் அவர் இறைவனது பார்வையில் தவறிழைக்கும் மனிதனாக இருக்கின்றான். அவர் இறைவனிடம் சொர்க்கம், மறுமையில் சுகமான வாழ்க்கையை வேண்டுகின்றான் என்றால் இறைவனுடைய ஞானம் அவனுக்கு, அறிவற்றவனே! முதலில் ஸிராத்தே முஸ்தகீமை தேடு. பிறகு உனக்கு இவையனைத்தும் மிக எளிதாக கிடைத்து விடும் என பதலளிக்கும்.

எனவே எல்லா துஆக்களையும் விட மேன்மையான துஆ உண்மையைத் தேடக்கூடியவர்களுக்கு மிகவும் அவசியமான துஆ ஸிராத்தே முஸ்தகீமை வேண்டுவதாகும்.

பிறகு ஸிராத்தே முஸ்தகீமுடைய ரூஹ் மற்றும் உண்மையை எடுத்துரைத்தவாறு ஒரு மூஃமினுக்கு ஸிராத்தே முஸ்தகீமில் எந்த தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கூறுகின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஸிராத்தே முஸ்தகீமுடைய உண்மைத்தன்மை என்னவென்றால் அடியான் அருள் மற்றும் கருணை மிகுந்த இறைவனிடம் அன்பு கொள்ளும் போது, அவனது விருப்பத்தில் திருப்தி அடையும் போது, தனது ஆன்மாவையும் உள்ளத்தையும் அவனிடம் ஒப்படைக்கும் போது மனிதனைப் படைத்த அந்த இறைவனிடம் தன்னைத்தானே ஒப்படைக்கும் போது அவனைத் தவிர வேறெவரிடமும் துஆ கேட்காமல் அவனிடம் மட்டுமே சிறப்புக்குரிய அன்பு கொள்ள வேண்டும். அவனிடம் மட்டுமே தேவைகளை வேண்ட வேண்டும். அவனிடம்

மட்டுமே ரஹ்மத் மற்றும் கருணையை வேண்ட வேண்டும். தனது நினைவற்ற நிலையிலிருந்து நினைவுக்கு வர வேண்டும். தனது நடத்தையை சரியாக்க வேண்டும். ரஹ்மானாகிய இறைவனிடம் பயப்பட வேண்டும். இறைவனது அன்பு அவனுடைய உடலில் புகுந்துவிட வேண்டும். அல்லாஹ் அவனுக்கு உதவி புரிய வேண்டும். அவனது நம்பிக்கை மற்றும் ஈமானில் உறுதி ஏற்பட வேண்டும். அப்போது அடியான் தனது முழு உள்ளத்துடன் தனது விருப்பம், தனது அறிவு, தனது உறுப்புகள், தனது நிலம், தனது விவசாயம் போன்ற அனைத்துடனும் தனது இறைவன் பக்கம் சாய்ந்து விடுவான். அவனைத் தவிர மற்ற அனைவரிடமிருந்து முகம் திருப்பிக் கொள்வான். அவனது பார்வையில் இறைவனைத் தவிர வேறொன்றும் இருக்காது. அவன் தனது மஹபூபையே அன்பிற்குரியவனையே பின்பற்றுவான்.

எனவே ஒரு உண்மையான மூஃமின் செய்ய வேண்டிய இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ மூலம் உலகம் கிடைத்து விடும். மார்க்கமும் கிடைத்து விடும்.

**கூறுகின்றார்கள்:** இதற்கு ஒரு முயற்சி தேவைப்படுகின்றது. கவனமற்ற நிலையிலிருந்து வெளிவர வேண்டும். மார்க்கத்தில் கவனமற்றிருப்பது நினைவற்ற நிலையாகும். அதிலிருந்து வெளிவர வேண்டும். அதனைத் தேட வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் இறை அன்பை உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் உங்களுக்கு உலகமும் மார்க்கமாகி விடும். மேலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு செயலும் நடைபெறும் என்பதாகி விடும்.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:** இஸ்லாமிய ஹிதாயத்தில் நிலைநிற்பதற்கு மூன்று விஷயங்கள் இருக்கின்றன. இவற்றை முஸ்லிம்கள் நினைவில் கொள்ள வேண்டும். இது இல்லாமல் ஹிதாயத் கிடைப்பது கடினம் ஆகும். இந்த மூன்று விஷயங்கள் தான் ஒரு மூஃமினுக்கு ஹிதாயத் எது என்பதையும் எதனை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

முதல் விஷயம், குர்ஆன் ஷரீஃப் ஆகும். அதாவது அல்லாஹ்வின் வேதம் ஆகும். அதனைத் தவிர நம்மிடம் நம்பிக்கை வாய்ந்தது வேறெதுவுமில்லை. அது இறை வார்த்தைகள் ஆகும். அது சந்தேகம் மற்றும் யூகங்களிலிருந்து தூய்மையானதாகும்.

இரண்டாவது, சுன்னத் ஆகும். சுன்னத் என்றால் நமது கருத்தின்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அமல்கள் ஆகும். இவை தனக்குள் ஒரு தொடரை வைத்துள்ளது. இது ஆரம்பம் முதலே குர்ஆன் ஷரீஃபுடன் சேர்ந்து வெளிப்பட்டதாகும். மேலும் எப்போதும் சேர்ந்தே இருக்கும் மற்றொரு வார்த்தையில் கூறுவதென்றால் குர்ஆன் ஷரீஃப் இறை வார்த்தை ஆகும். மேலும் சுன்னத் ரஸூல் (ஸல்) அவர்களது அமல் ஆகும். தொன்றுதொட்டே இறைவனுடைய வழக்கம் இவ்வாறு தான் இருந்து வருகிறது. அதாவது நபிமார்கள் இறைவார்த்தைகளை மனிதர்களுடைய ஹிதாயத்திற்காக கொண்டு வருகிறார்கள். மேலும் அதனை அமல்கள் மூலம் செயல்ரீதியாக விளக்கிக் காட்டுகின்றார்கள். அவர்களுடைய அமல்கள் இறைவனுடைய கட்டளைக்கேற்பவே இருக்கும். மேலும் விளக்கமாகவும் இருக்கும். இதன் மூலம் இறை வார்த்தைகளை புரிந்து கொள்வதில் மக்களுக்கு சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே ஆகும். மேலும் இதன் மூலம் எல்லா விஷயங்களும் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகவே ஆகும். இறை வார்த்தையின்படி தானும் அமல் செய்வார்கள். மற்றவர்களையும் செய்ய வைப்பார்கள்.

மூன்றாவது விஷயம், ஹிதாயத்திற்கான மூன்றாவது வழி ஹதீஸ் ஆகும். ஹதீஸ் என்பது நமது கருத்தின்படி அறிவிப்புகளின் வடிவில் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஏறத்தாழ 150 வருடங்களுக்குப் பிறகு பல்வேறு அறிவிப்பாளர்கள் மூலம் ஒன்றுசேர்க்கப்பட்டதாகும். இதற்கு மூன்றாவது இடமாகும்.

எனவே இதில் குர்ஆன் மற்றும் சுன்னத்துடன் முரண்படாத ஹதீஸ்கள் சரியான ஹதீஸ்கள் ஆகும். அவைகள் ஒரு மூஃமினுடைய ஹிதாயத்திற்கான வழிகள் ஆகும்.

**அன்னார் கூறினார்கள்:** நாம் அஹ்லே ஹதீஸ்கள் போன்று சுன்னத் மற்றும் ஹதீஸை ஒன்று என்று ஏற்றுக் கொள்ள மாட்டோம். எவ்வாறிருப்பினும் இது ஒரு மூஃமினுடைய ஹிதாயத்திற்கான விளக்கமான செயல்திட்டம் ஆகும். ஒரு மூஃமின் எப்போதெல்லாம் ஹிதாயத்திற்காக துஆ கேட்பாரோ இந்த விஷயங்களை கண்முன் நிறுத்தி அதனை தேடக்கூடியவராக இருப்பாரோ அதுவே உண்மையான ஹிதாயத்தின் பக்கம் அவருக்கு வழிகாட்டும். பிறகு அவனுக்கு இறைவனுடன் உள்ள தொடர்பில் உறுதி ஏற்படும். சில மக்கள் பீர், பக்கீர் பின்பு செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். சில சமயங்களில் எனக்கு புகார்களும் வருகின்றன. அஹ்மதியல்லாதவர்களின் தொடர்பின் விளைவால் சில அஹ்மதிகளுக்கு தனது துஆவின் பக்கம் கவனக்குறைவு ஏற்பட்டு விடுகிறது. மேலும் மற்றவர்களின் மூலம் துஆ செய்வதின் பக்கம் அதிக கவனம் ஏற்படுகிறது என எனக்கு புகார்கள் வருகின்றன. அல்லது பில்லி சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவாறு அதனை எடுப்பதற்காக மற்றவர்களிடம் செல்கின்றார்கள். மாற்று மதத்தினரிடம் வரை செல்கிறார்கள். இந்த அளவு அறிவீனத்தில் மூழ்கி இருக்கிறார்கள். தனது அமல்களின் பக்கமும், தனது துஆக்களின் பக்கமும் கவனமற்றவர்களாக இருக்கிறார்கள். இது மிகப்பெரிய தவறாகும். அல்லாஹ்வின் அருளால் ஒரு சிலரைத் தவிர அஹ்மதிகளில் வேறு யாரும் கிடையாது. மாறாக மற்றவர்கள் ஷிர்க்கில் எல்லையை மீறி விட்டனர். பிறகு தன்னைத் தானே முஸ்லிம் என்று கூறிக் கொள்கிறார்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

குர்ஆன் ஷரீஃபில் இஸ்லாத்திற்கு இஸ்திகாமத் அதாவது உறுதியாக நிலை நிற்றல் என்று கூறப்பட்டுள்ளது. எனவே தான் குர்ஆன் இவ்வாறு துஆ கற்றுத் தருகிறது. இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் அதாவது எங்களை உறுதியாக நிலை நிற்கும் வழியில் நிலைநிறுத்துவாயாக. இஸ்திகாமத் அதாவது உறுதியான நிலைநிற்றல் மனிதன் தொடர்ந்து செய்யும் போது ஹிதாயத்தைப் பெற்ற மனிதனாக ஆகி விடுகின்றான்.

**அன்னார் கூறுகின்றார்கள்:** இதன் காரணமாகத்தான் திருக்குர்ஆனில் இஸ்லாத்திற்கு இஸ்திகாமத் (உறுதியாக நிலைநிற்றல்) எனப்பெயர் இடப்பட்டுள்ளது. இதற்கு மொழியாக்கம் செய்தவாறு கூறுகிறார்கள். எங்களை உறுதியாக நிலை நிற்கும் வழியில் நிலைநிறுத்துவாயாக. உன்னுடைய அருள் பெற்ற அவர்களது வழியில் யார் மீது வானத்தின் வாசல்கள் திறக்கப்பட்டதோ அவர்களது வழியில் எங்களை நடத்துவாயாக.

**அன்னார் கூறுகின்றார்கள்:** நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விஷயத்தின் நிலைநிற்றலும் அதன் நோக்கத்தின் மீது பார்வை செலுத்திய பிறகு தான் புரிந்து கொள்ள முடியும். அதாவது அதற்கான அசல் காரணத்தைக் கண்ட பிறகே புரிந்து கொள்ள முடியும்.

மனிதனது இருப்பின் நோக்கம் என்னவென்றால் மனித இனம் இறைவனுக்காக படைக்கப்பட்டிருக்கிறது. மனிதன் இறைவனுக்காக படைக்கப்பட்டிருக்கிறான். அவனை வணங்குவதற்காக படைக்கப்பட்டடிருக்கிறான். எனவே மனிதனின் நிலைநிற்றலின் தன்மை என்னவென்றால் எவ்வாறு நிரந்தரமாக கட்டுப்படுவதற்காக படைக்கப்பட்டானோ அதே போன்றே அவன் இறைவனுக்காக ஆகி விட வேண்டும். அவன் தனது அனைத்து ஆற்றல்களுடன் இறைவனுக்காக ஆகி விடுவானோ சந்தேகமின்றி அவன் மீது அருள்கள் இறங்கும். இதனை மற்றொரு வார்த்தையில் தூய வாழ்வு எனக் கூறலாம். எவ்வாறென்றால் நீங்கள் பார்க்கின்றீர்கள். சூரியனை நோக்கியிருக்கும் ஜன்னலைத் திறக்கும் போது சூரியக் கதிர்கள் கண்டிப்பாக ஜன்னல் வழியாக வந்து விடும். அதே போன்று மனிதன் இறைவன் மீது நேராக ஆகும் போது அவனுக்கும் இறைவனுக்கும் இடையில் எவ்வித திரையும் இல்லாமல் இருக்கும் போது அப்போது ஒரு ஒளி மிகுந்த சுடர் அவன் மீது இறங்கும். அது அவனை ஒளிமயமாக்குகிறது. அவனிடம் உள்ள அனைத்து அசுத்தங்களையும் அது தூய்மைப்படுத்தி விடும். அப்போது அவன் ஒரு புதிய மனிதனாக ஆகி விடுகின்றான்.

ஒரு மிகப்பெரிய மாற்றம் அவனிடம் உருவாகிறது. அப்போது அவனுக்கு தூய்மையான வாழ்வு கிடைத்திருக்கிறது என்று கூறப்படும். இந்த தூய வாழ்க்கை பெறக்கூடிய இடம் இந்த உலகம் தான்.

**இதனைப் பற்றித்தான் அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான்.**

*இந்த உலகத்தில் யார் குருடராக இருப்பாரோ எவருக்கு இறைவனைக் காணக்கூடிய ஒளி கிடைக்காதோ அவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார். (17:73)*

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எந்த விஷயங்களை கண் முன் வைக்க வேண்டும் என்பதை விளக்கியவாறு கூறுகின்றார்கள்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் எல்லா முஸ்லிம்களும் இய்யாக்க நஃபுதுவில் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் இய்யாக்க நஃபுதுக்கு இய்யாக்க நஸ்தயீனை விட முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. செயல்ரீதியாக நன்றி செலுத்த வேண்டும். இந்த விஷயங்களைத்தான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் கூறப்பட்டுள்ளது. செயல்ரீதியில் நன்றி செலுத்துவது இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமின் விளக்கமாகும். அல்லது அதில் விளக்கம் வந்துள்ளது என்பதாகும். அதாவது துஆ செய்வதற்கு முன்பு காரணிகளைக் கவனமாக கையாள வேண்டும். பிறகு துஆவின் பக்கம் திரும்ப வேண்டும். முதலில் கொள்கை, நன்னடத்தை, மற்றும் பழக்கங்களில் சீர்திருத்தம் வேண்டும். பிறகு இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் ஈடுபட வேண்டும். முதலில் தனது கொள்கைகளை சரி செய்ய வேண்டும். பித்அத்துகளை தவறான சடங்குசம்பிரதாயங்களை விட்டு விட வேண்டும். இஸ்லாமிய கொள்கையினை மட்டும் பின்பற்ற வேண்டும். பிறகு தனது நடத்தை மேம்படுத்துங்கள் தன்னுடைய அமல்களை சரி செய்யுங்கள். அதிலும் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டால் பிறகு இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை செய்ய வேண்டும். அப்போது தான் அல்லாஹ் இந்த துஆவை ஏற்றுக் கொள்வான்.

**அன்னார் கூறுகின்றார்கள்:** இறைவன், இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை போதிப்பதில் மனிதன் மூன்று விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என விரும்பினான்.

முதல் விஷயம் – நன்னடத்தையின் நிலை. இரண்டாவது, கொள்கையின் நிலை. மூன்றாவது அமல்களின் நிலை. ஒன்றுசேர்த்துக் கூறுவதென்றால் மனிதன் இறைவனிடம் இருந்து கிடைத்த ஆற்றல்கள் மூலம் தனது நிலைமையை சரி செய்ய வேண்டும். பிறகு இறைவனிடம் வேண்ட வேண்டும். அல்லாஹ் மனிதனுக்கு கொடுத்த ஆற்றலாக அறிவு, சிந்திக்கும் திறன் போன்றவற்றின் மூலம் தனது சீர்திருத்ததின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு இறைவனிடம் வேண்ட வேண்டும். என்னிடம் உள்ளதை நான் உபயோகப்படுத்துகின்றேன். இப்போதாவது என்னை ஹிதாயத்தின் பக்கம் அழைத்துச் செல். உன்னுடைய உதவியில்லாமல் ஹிதாயத் கிடைக்காது என துஆ செய்ய வேண்டும். மேலும் சீர்திருத்தம் செய்யும் நிலையில் துஆ செய்யக் கூடாது என்பது ஒருபோதும் கிடையாது. மாறாக தன்புறமிருந்து சீர்திருத்த முயற்சி செய்யும் போதும் துஆ செய்ய வேண்டும்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ மனிதனுடைய நாவு, உள்ளம், மற்றும் அமல் மூலமாக செய்யப்பட வேண்டும். அதாவது நாவினால் அதனை வெளிப்படக் கூடியதாக இருக்க வேண்டும். உள்ளத்தின் மூலமாகவும் அது வெளிப்பட வேண்டும். மற்றும் மனிதனது ஒவ்வொரு அமல் மூலமாகவும் அது வெளிப்படக்கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ உண்மையான துஆவாக இருக்கும்.

மனிதன் இறைவனிடம் நல்லவனாக ஆவதற்கு துஆ செய்யும் போது அவனுக்கு ஒரு வெட்கம் ஏற்படுகிறது. ஆனால் இந்த ஒரு துஆ தான் இந்த கஷ்டங்களை நீக்குகிறது. மனிதன் நாவினால் ஒப்புக்கொள்ளும் போது உள்ளமும் இதன்பக்கம் சாய்கிறது. முயற்சியும், கவனமும் இதன்பக்கம் ஏற்படும். அதாவது இங்கு இரண்டு இரண்டு வேலைகள் நடைபெறுகின்றன. ஒரு பக்கம் மனிதன் துவாவின் மூலம்

முயற்சி செய்து கொண்டிருப்பான். மேலும் துஆ செய்யும் போது மறுபடியும் இந்த வி–யங்களை அதாவது நாவை சரிசெய்வதில், உள்ளத்தை சரிசெய்வதில், தன்னுடைய அமல்களை சரிசெய்வதில் முயற்சி செய்கின்றான். நான் இந்த சீர்திருத்தங்களை செய்யாமல் எவ்வாறு இறைவனிடம் என்னை நேரான வழியில் நடத்து என்று எவ்வாறு கேட்பேன் என வெட்கப் படுகின்றான்.

**பிறகு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ மார்க்க மற்றும் உலகத்தின் அனைத்து தேவைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஏனென்றால் எந்த ஒரு வேலையிலும் எப்போது வரை ஸிராத்தல் முஸ்தக்கீம் கிடைக்கப் பெறாதோ அப்போது வரை எதுவும் கிடைக்கப் பெறாது. இதுவெறும் ஆன்மீக நிலைகளுக்கு மட்டும் அவசியமானது கிடையாது. மாறாக உலக தேவைகளுக்கும் இந்த துஆ இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தக்கீம் அவசியமானதாக இருக்கின்றது. ஏதாவது பொறுப்பில் இருப்பவராக இருந்தாலும் சரி, மருத்துவராக இருந்தாலும் சரி, அல்லது ஏதாவது பணியை செய்பவராக இருந்தாலும் சரி, அவருக்கு அவருடைய வேலையில் ஸிராத்தல் முஸ்தக்கீம் அவசியமானதாக இருக்கின்றது. அவ்வாறு இல்லையென்றால் அவருடைய வேலையில் குறைபாடு ஏற்பட்டுவிடும்.

**மேலும் கூறுகின்றார்கள்:**

மிகச் சிறந்த துஆ சூரா ஃபாத்திஹாவாகும். ஏனென்றால் அது முழுமையான துவாவாகும். பொறுப்பாளர்களுக்கு பொறுப்புணர்வு வரும்போது அவர் பொறுப்புடைய ஸிராத்தே முஸ்தக்கீமிற்கு வந்து விடுவார். ஒரு பொறுப்பாளர் இருக்கின்றார் என்றால் அவருக்கு பொறுப்பை செய்வதற்கு சரியான வழி கிடைக்கும் போது தான் அவர் பொறுப்பின் ஸிராத்தே முஸ்தக்கீமிற்குள் வருகிறார்.

ஒரு மருத்துவர் இருக்கின்றார் என்றால், அவர் படித்து முடித்தபின்பு அவருக்குரிய பயிற்சிக் காலத்தின் பணியையும் முடிக்கிறார். மேலும் பல்வேறு அனுபவமிக்க மருத்துவர்களுடன் பணிபுரிகிறார். அப்போது தான் அவருக்கு ஸிராத்தே முஸ்தகீம் உடைய பல்வேறு படித்தரம் கிடைக்கிறது. இதனைப் போன்று மற்ற பணிகளைச் செய்யக் கூடியவர்களும் செயல்படுகின்றார்கள். பொறுப்பின் ஸிராத்தே முஸ்தகீமில் நிலைபெறும் போது அவர் வெற்றி அடைந்து விடுகிறார்.

இதைப் போன்று நீங்கள் இறைவனை அடையக்கூடிய ஸிராத்தே முஸ்தகீமை தேடுங்கள். இறைவனை சந்திப்பதற்கான ஸிராத்தே முஸ்தகீமை தேடுங்கள். அதற்காக முதலில் முயற்சி செய்யுங்கள். பிறகு துஆ செய்யுங்கள்.

இறைவா! நான் பாவம் இழைத்த உனது அடியான் ஆவேன். நான் இயலாதவன் ஆவேன். எனக்கு நேரான வழியினைக் காட்டுவாயாக எனது துஆ செய்யுங்கள். சின்ன, பெரிய தேவைகள் அனைத்தையும் சிறிதும் வெட்கமின்றி இறைவனிடம் கேளுங்கள். அவனே அனைத்தையும் வழங்குபவனாவான். அதிகமாக துஆ செய்பவர் தான் மிக நல்லவர் ஆவார். அசல் நன்மையும் அதிகமாக துஆ செய்வதே ஆகும். நான் கூறியது போன்று ஏதாவது பிரச்சனையைப் போக்குவதற்கு பில்லி சூனியம் எடுப்பவருடைய தேவையில்லை. அதேபோல் பீர், ஃபக்கீருடைய கபருக்குப் போக வேண்டிய அவசியமும் இல்லை. தன்னுடைய நிலைமையை சரிசெய்தவாறு அடியான் இறைவன் முன்பு குனிந்தான் என்றால் அதுவே போதுமானதாகும். அவன் மட்டும் தான் தேவைகளை நிறைவேற்றக் கூடியவனாக இருக்கின்றான்.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:**

மூஃமினின் மிஃராஜாகிய தொழுகையின் நோக்கம் என்னவென்றால் இதில் துஆ செய்ய வேண்டும். இதில் தான் உம்முல் அதிய்யா துஆவின் தாய் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் கேட்கப்படுகிறது.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

தொழுகையில் கலப்பற்ற முறையில் இந்த துஆவைக் கேளுங்கள். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் துஆக்களின் தாய் ஆகும். மூஃமின்களின் மிஃராஜ் தொழுகை ஆகும். இதனை கேளுங்கள். அல்லாஹ் தனது அருளின் வாசலைத் திறப்பான்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

மனிதனுடைய வாழ்வின் நோக்கம் ஸிராத்தே முஸ்தகீமில் செல்வதும் அதனைத் தேடுவதும் ஆகும். இதுதான் நோக்கம் ஆகும். இதனை ஒவ்வொரு மூஃமினும், ஒவ்வொரு மனிதனும் தான் கண் முன் வைக்க வேண்டும். இதனை இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் என்ற வார்த்தைகளால் கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ்வே எங்களுக்கு நேரான வழியினைக் காட்டுவாயாக. எவர்கள் மீது அருள் புரிந்தாயோ அவர்களுடைய வழியினை எங்களுக்கு காட்டுவாயாக. இந்த துஆ ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் கேட்கப்படுகின்றது. இந்த அளவு இதனை திரும்பத் திரும்ப கூறுவது இதனுடைய முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

**கூறுகின்றார்கள்:** நமது ஜமாஅத் நினைவில் கொள்ளட்டும். இது சாதாரண விஷயம் கிடையாது. கிளியைப் போன்று வெறும் நாவினால் இந்த வார்த்தைகளை கூறுவது உண்மையாக நோக்கம் கிடையாது. மாறாக மனிதனை முழு மனிதனாகக் கூடிய பாங்களில் ஈடுபடாமல் தடுக்கக்கூடிய ஒரு மருந்தாகும். இதனை எப்போதும் கண் முன் நிறுத்த வேண்டும்.

இந்த வசனத்தில் நான்கு விதமான தரத்தைப் பெறுவதற்கான வேண்டுதல் இருக்கின்றது. எவர் இந்த நான்கு தரங்களை பெறுவாரோ அவர் ஒரு வகையில் துஆ கேட்பது மற்றும் மனிதப் படைப்பின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவராவார். அவருக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களையும் சக்திகளையும் உபயோகப்படுத்தக் கூடிய உரிமையையும் நிறைவேற்றக் கூடியவராவார்.

ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்பதில் நான்கு உயர் தரங்கள் உள்ளன. நபி, ஸித்தீக், ஷஹீது மற்றும் ஸாலிஹ் போன்றவையாகும். நான் உங்களுக்கு இதனையும் கூற விரும்புகின்றேன்.

பலரும் தன்னால் ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகளை கையாண்டு இதனை அடைய முயற்சி செய்கின்றனர். நான் உங்களுக்கு கூறுகின்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தாத அனைத்து வழிகளும் வீணானவையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட அருள்செய்யப்பட்ட வழியினுடைய அனுபவசாலி யார் இருக்க முடியும்? அன்னார் மீது நுபுவ்வத்தின் அனைத்து மேன்மையும் நிறைவேறி விட்டன. அன்னார் (ஸல்) அவர்கள் பயன்படுத்திய வழிதான் மிகச் சரியானதும் குறிக்கோள் அடைவதற்கு அருகாமையில் உள்ளதும் ஆகும். இந்த வழியினை விட்டு விட்டு வேறொரு வழியினை அது எவ்வளவு தான் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தாலும் சரி எனது எண்ணப்படி அது வழிகேடாகும். இதனை இறைவன் என்னிடம் வெளிப்படுத்தி இருக்கின்றான். எனவே அருள் செய்யப்பட்டவர்களின் மீதுள்ள மேன்மை அல்லாஹ் ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிமில் எதன் பக்கம் சுட்டிக் காட்டியுள்ளனோ அதனைப் பெறுவதுதான் ஒவ்வொருவருடைய அசல் நோக்கமாகும். நமது ஜமாஅத்தினருக்கு குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஏற்படுத்துவதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய ஜமாஅத்தைப் போன்று ஆக வேண்டும் என விரும்பினான். இதன் மூலம் இந்த இறுதிக் காலகட்டத்தில் குர்ஆன் ஷரீஃப் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைத்துவம் மற்றும் கண்ணியம் சாட்சியாக இருக்க வேண்டும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

உறுதியாக நம்புங்கள். எதுவரை மனிதன் ஸிராத்தே முஸ்தகீமில் செல்ல மாட்டானோ அதுவரை அல்லாஹ் மகிழ்ச்சி அடைய மாட்டான். மேலும் இறைவன் மற்றும் அவனது பண்பை அடையாத வரை இந்நிலை ஏற்படாது. மேலும் அவனுக்கு விருப்பமான வழிகளில் நடக்காதவரை இது ஏற்படாது. எனவே இது அவசியமாக இருக்கும் போது மனிதன் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பிறகு இந்த துஆவின் விரிவைப் பற்றி கூறும் போது கூறுகின்றார்கள்.

இந்த துஆவைப் பற்றி நினைவில் கொள்ள வேண்டும். ஒன்று, அனைத்து மனித குலத்தையும் இதில் இணைக்க வேண்டும். அதாவது துஆ செய்யும் அனைத்து மனித இனத்திற்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களை ஸிராத்தே முஸ்தகீமில் நடத்துவானாக. அவர்களையும் அருள்களுக்கு வாரிசாக்குவானாக.

இரண்டாவது இடத்தில் அனைத்து முஸ்லிம்களையும் இந்த துஆவில் சேர்க்க வேண்டும்.

மூன்றாவது, தொழுகையில் கலந்து கொள்ளக் கூடியவர்களாக அதாவது உங்களுடன் சேர்ந்து தொழக் கூடியவர்களாகவும் இந்த துஆவில் சேர்க்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: இதுபோன்ற எண்ணங்களால் அனைத்து மனித இனமும் இதில் அடங்கி விடும். இதுதான் இறை விருப்பமும் ஆகும். ஏனென்றால் இதற்கு முன்பு இந்த அடிப்படையில்தான் தனது பெயரை ரப்புல் ஆலமீன் என வைத்துள்ளான். இது பொதுவான அனுதாபத்திற்கு வழிவகுக்கிறது. இதில் விலங்கினங்களும் அடங்கும். பிறகு தனது பெயரை ரஹ்மான் என வைத்துள்ளான். இது மனித இனத்தின் மீது அனுதாபம் கொள்வதற்கு வழி வகுக்கிறது. ஏனென்றால் இந்த ரஹ்மத் மனிதனுடன் தொடர்பு கொண்டதாகும். பிறகு தனது பெயரை ரஹீம் என வைத்துள்ளான். இந்தப் பெயர் மூஃமின்கள் மீது அனுதாபம் கொள்வதற்கு வழி வகுக்கிறது. ஏனென்றால் ரஹீம் என்ற சொல் மூஃமின்களுடன் தொடர்பு கொண்டதாகும். பிறகு தனது பெயரை மாலிக்கி யவ்மித்தீன் என வைத்துள்ளான். இந்த பெயர் தற்போதுள்ள ஜமாஅத்தின் மீது அனுதாபம் கொள்வதற்கு வழிவகுக்கிறது. ஏனென்றால் யவ்மித்தீன் இறைவன் முன்பு ஜமாஅத்துகள் ஒன்றுசேரக்கூடிய நாள் ஆகும். இந்த விளக்கத்தின் அடிப்படையில் தான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ அமைந்துள்ளது. ஆக இந்த மேன்மையிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் இந்த துஆவில் அனைத்து மனித குலத்தின் அனுதாபமும் அடங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. இஸ்லாத்தின் போதனையும், அனைத்திற்கும் நன்மை பயக்க வேண்டும் என்பதேயாகும்.

கூறுகின்றார்கள்: இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால் சரியான ஞானம் கிடைப்பதற்காக துஆ செய்ய வேண்டும் என்பதாகும்.

அல்லாஹ் நமக்கு போதனைகளை வழங்கியவாறு கூறுகின்றான். நீங்கள் அல்லாஹ்விடம் அவன் உங்களுக்கு தன்னுடைய பண்புகளின் தோற்றத்தை வெளிப்படுத்த வேண்டும் என துஆ செய்யுங்கள். உங்களை நன்றி செலுத்தக் கூடிய அடியார்களாக ஆக்குவானாக. ஏனென்றால் முந்தைய சமுதாயங்கள் அல்லாஹ்வின் பண்புகள், அருள்கள் மற்றும் அவனுடைய விருப்பத்தின் ஞானத்திலிருந்து குருடனாக ஆன பிறகே வழிகெட்டுப் போயிருக்கின்றன. அவர்கள் தங்களுடைய வாழ்வை பாவச் செயல்களில் அதிகமாக மூழ்கடிக்கக் கூடிய அமல்களை செய்தே வந்திருக்கிறார்கள்.

எனவே இறைவனுடைய கோபம் அவர்கள் மீது இறங்கியது. அவர்கள் அழிவிற்குள்ளான மக்களுடன் இணைந்து விட்டார்கள். அல்லாஹ் தனது வேதத்தில் கைரில் மக்லூபி அலைஹிமில் இதன் பக்கம் தான் கவனமூட்டியுள்ளான். முந்தைய வசனத்தைப் படிக்கும் போது தெரிவது என்னவென்றால் அல்லாஹ் அருள் செய்த மக்கள் மீது தான் கோபத்தை இறக்கியுள்ளான் என்பதாகும். இது மிகவும் கவனம் செலுத்த வேண்டிய இடமாகும்.

கூறுகின்றார்கள்: அருள் செய்யப்பட்டவர்கள் மீதுதான் கோபம் இறங்குகிறது. எனவே மனிதன் தன்மீது அல்லாஹ் அளவுக்கு அதிகமாக அருள் செய்துள்ளான் என நினைக்கும் போது அவனிடம் பயந்தவாறு செயல்பட வேண்டும்.

கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் மக்லூபி அலைஹிம் என்பது அல்லாஹ் குறிப்பாக எவர்கள் மீது அருள்களையும், பரக்கத்துகளையும் இறக்கினானோ, அவர்கள் அல்லாஹ்வின் போதனையை மறந்து விட்டு தனது விருப்பங்களைப் பின்பற்ற தொடங்கினர். அவர்கள் அருள் செய்த இறைவனையும் அவனுக்குரிய உரிமைகளையும் மறந்து விட்டு, நிராகரிப்பவர்களுடன் இணைந்து விட்டனர்.

இதனைப் போன்று ளால்லீன் என்பது அவர்கள் நேரான வழியில் நடப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் சரியான அறிவு, ஒளி, உண்மையான ஞானம் பாதுகாக்கக் கூடிய வாய்ப்பளிக்கக் கூடிய இவர்கள் அவர்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. மாறாக அவர்கள் மீது மூட நம்பிக்கைகள் மிகைத்து விட்டன. அவர்கள் அதன் பக்கம் குனிந்து விட்டனர். நான் கூறியது போன்று சில முஸ்லிம்களின் நிலை அவ்வாறு தான் உள்ளது.

கூறுகின்றார்கள்: அவர்கள் நேரான வழியினை விட்டு விலகி விட்டனர். சரியான குறிக்கோளை மறந்து விட்டனர். எனவே அவர்கள் வழிதவறி விட்டனர். அவர்கள் தனது சிந்தனையினை தெளிவான மற்றும் ஒளி மிகுந்த புல்வெளியில் விடவில்லை. அவர்களுடைய அறிவு சிந்தனை, பார்வையின் மீது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் இறைவன் மீது அவனது படைப்பினங்களின் மீதும் நல்லியல்பு மற்றும் உள்ளம் ஏற்றுக் கொள்ளாத விஷயங்களை அனுமதிக்கப்பட்டதாக ஆக்கியுள்ளார்கள். அவர்கள் புரிவதில்லை. ஷரீஅத்துகள் அழிவிலிருந்து காப்பாற்றி சிகிச்சை அளிக்கின்றன. மருத்துவர் உடலின் உதவியாளர் ஆவார். பகைவராக இருக்கமாட்டார். அந்தோ! மக்கள் உண்மையின் பாதையினை எவ்வளவு தூரம் அறியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரபி நூல் கராமத்து ஸாதிகீனுடைய மொழியாக்கம் ஆகும்.

எனவே இக்காலத்தின் இமாமை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாத இம்மக்கள் வழிதவறியவர்களாக இருக்கிறார்கள். அல்லாஹ் நம்மை கலப்பற்ற முறையில் அவனிடம் துஆ செய்யக்கூடிய மக்களாக்குவானாக. ஹிதாயத் கிடைத்த பின்பு அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகக்கூடிய மக்களைப் போன்று ஆக்காமல் இருப்பானாக. இவர்கள் வழிதவறிச் சென்று தன்னுடைய மறுமையை பாழாக்குகின்றனர். அல்லாஹ் நமக்கு தனது சரியான ஞானத்தை வழங்குவானாக. எப்பொழுதும் நம்மை இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீமில் நடத்துவானாக. இந்த ரமலானை நமக்கு தன்னுடைய தொடர் அருள் மற்றும் ஹிதாயத்தில் முன்னேறக் கூடியதாக ஆக்குவானாக. நாம் எப்பொழுதும் அவன் பக்கமே குனிந்தவாறு இருப்போமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 26.08.2011**

Translated by : **Maulavi ZIYAUL HAQ**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**